# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 07 புதன்கிழமை 19.02.2025 கதிர் 132







## காலியில் தந்தை, மகன், மகள் என

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சுட்டுப் படுகொலை!





**காலி, பெப். 19**

**காலி, மித்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடேவத்த சந்திக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் தந்தை, மகள் மற்றும் மகன் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.**

நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த தந்தை, மகள் மற்றும் மகன் மீது இனந்தெரியாத நபர்கள் சிலர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 39 வயதுடைய தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதன்போது படுகாயமடைந்த 6 வயதுடைய மகள் தங்காலை வைத்தியசாலையிலும், 9 வயது மகன் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர். எனினும், அவர்கள் இருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு ரி - 56 துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொலிஸார், சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான தீவிர விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## 22 வயது இளைஞர் வெட்டிப் படுகொலை

கொழும்பு , பெப். 19

கொழும்பு, கொட்டாஞ்சேனை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட புளூமெண்டல் ரயில் மார்க்கப் பகுதியில் இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர்

7 ➤


## ஓடும் ரயிலில் 'செல்பி' எடுத்த ரஷ்யப் பெண் கீழே வீழ்ந்து பலி

கொழும்பு , பெப். 19

பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி இன்று புதன்கிழமை காலை பயணித்த ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து ரஷ்ய நாட்டுப் பிரஜையான பெர்மினோவா ஒல்கா என்ற 51 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார்.

பதுளை ரயில் நிலையத்தில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில்

7 ➤



## நீதிமன்றத்தின் குற்றவாளிக் கூண்டில் நின்ற பாதாளக் கும்பலின் தலைவர் சுட்டுக்கொலை

### கொழும்பில் பரபரப்பு

கொழும்பு , பெப். 19

கொழும்பில் நீதிமன்றத்தில் வைத்து பாதாள உலகக் கும்பலின் தலைவர்களில் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

புதுக்கடை நீதிவான் நீதி மன்றத்தில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பாதாள உலகக் கும்பலின் முக்கிய புள்ளியான 'கனேமுல்ல

7 ➤

## நீதிமன்றங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்

### நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவிப்பு



கொழும்பு, செப். 19

நீதிமன்றங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

புதுக்கடை நீதிமன்ற வளாகத்துக்கு இன்று வருகை தந்த வேளையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

"நீதிபதிகள், சட்டத்தரணிகள் உட்பட அனைவரினதும் பாதுகாப்பு முக்கியம். எனவே, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்." - என்றும் நீதி

7 ➤

## சட்டத்தரணி வேடத்தில் வந்த இரண்டு துப்பாக்கிதாரிகள்



கொழும்பு , பெப். 19

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 'கனேமுல்ல சஞ்சீவ' உயிரிழந்துள்ள நிலையில், பொலிஸாரால்

மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சட்டத்தரணி வேடத்தில்

7 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# ஹர்ஷவுக்குப் பதவி வழங்காதது ஏன்?



கொழும்பு , பெப். 19

கட்சியின் கொள்கை காரணமாகவே பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவுக்கு கட்சியின் கொழும்பு தலைமைத்துவம் வழங்கப் படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

இன்று ஊடகங்களுக்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார், நியமனத்திற்கு எதிராக பரிந்துரைகள் வழங்கப்பட்டதால், இதற்கு முன்னர் அவர் இதேபோன்று பதவியை இழந்ததாகவும், அதன் பிறகு கட்சித் தலைவர் அந்தப் பதவியை ஏற்றுக்கொண்டதாகவும் கூறினார்.

“நான் வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் இருந்த போதிலும், பிரச்சினையை ஏற்படுத்தக்கூடும் என்பதால் என்னை நியமிக்க வேண்டாம் என்று பரிந்துரைகள் செய்யப்பட்டன. பின்னர் கட்சித் தலைவர் அந்தப் பதவியை ஏற்க அறிவுறுத்தப்பட்டது,” என்று அவர் விளக்கினார்.

இந்த முறை ஹர்ஷ டி சில்வாவின் நியமனம் தொடர்பாகவும் இதே போன்ற ஒரு சம்பவம் நடந்ததாகக்கூறிய மரிக்கார், கட்சித் தலைவர் தொடர்ந்து அந்தப் பதவியில் நீடிக்க விரும்புவதாகத் தெரிகிறது என்றார்.

“அரசியலில், நாம் பொறுமையாக இருக்க வேண்டும், சில சம்பவங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டும். நாம் விரும்புவது எப்போதும் கிடைக்காது. நாம் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவையில் உரையாற்றுவதற்கான வாய்ப்பைப் பெற போராட வேண்டிய நேரங்கள் உள்ளன. இவை பொதுவான நிகழ்வுகள்,” என்று அவர் மேலும் கூறினார். சமீபத்தில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஒரு உள் அதிகாரப் போராட்டமாகக் கருதப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவின் நியமனம் தொடர்பான சர்ச்சை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு கொழும்பு மாவட்டத் தலைமைப்பொறுப்பு வழங்கப்பட்டதை அடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவும் சமீபத்தில் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார் (ஐ)

# எதிரணிகளை முடக்கி தேர்தல் வேண்டாம்

கொழும்பு , பெப். 19

எதிரணிகளை நாடாளுமன்றத்துக்குள் முடக்கி வைத்துவிட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்தியுள்ளார்.

எனவே, பாதீட்டு கூட்டத் தொடர், ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை, தமிழ், சிங்களப் புத்தாண்டு என்பன முடிந்த பின்னர் பொருத்தமானதொரு நாளில் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மார்ச் 21ஆம் திகதி வரை வரவு- செலவுத் திட்ட கூட்டத் தொடர் நடைபெறும். பாதீட்டு விவாதம் என்பது எதிரணிகளுக்கு முக்கியம். எனவே, எம்மை நாடாளுமன்றத்துக்குள் வைத்துவிட்டு தேர்தல் நடத்தப்படக்கூடாது.

பொருத்தமானதொரு சூழ்நிலையிலேயே தேர்தல் நடத்தப்பட வேண்டும். மாதக் கணக்கத்தில் தேர்தலைப் பிற்போடுமாறு கோரவில்லை.

ஜி.சீ.ஈ . சாதாரண தரப் பரீட்சை நடைபெறவுள்ளது. தமிழ், சிங்களப் புத்தாண்டு நடைபெறவுள்ளது. சுமார் 10 நாட்கள் வரை விடுமுறை காலப்பகுதி உள்ளது.



எனவே, அரச சேவையாளர்களுக்கு நெருக்கடி நிலை உருவாகும். தேர்தல் திகதி தொடர்பில் சுயாதீனமாகத் தீர்மானம் எடுக்குமாறு நாம் தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஏற்கனவே செலுத்திய கட்டுப்பணமும் மீளச் செலுத்தப்படவில்லை. எமக்கு நிதி நெருக்கடி உள்ளது. அதனை மீளச் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்” என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# கடவுச்சீட்டு தொடர்பான தகவல்

கொழும்பு , பெப். 19

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத் தின் செயற்பாடுகள் இன்று முதல் 24 மணி நேரமும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஏற்ற வகையில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் கடவுச்சீட்டுகளை வழங்கும் பணி நடைபெறும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அதற்கமைய, இன்று இரவு முதல் பத்தரமுல்ல பகுதிக்கு சிறப்பு பேருந்து சேவையும் இயக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தேவையான பணியாளர்களை சுழற்சியில் முறையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக பயிற்றப்பட்ட ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற ஊழியர்களின் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)



# உணவு பொருட்களின் விலைகளை அதிகரிப்போருக்கு சிக்கல்



கொழும்பு , பெப். 19

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் உணவு வகைகளின் விலைகள் திடீரென அதிகரிக்குமாறு கோருகின்ற சங்கங்களின் சட்டத்தன்மை தொடர்பில் ஆராயப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.


தற்போது பொருட்களின் விலை குறைவடைந்துள்ளதாகவும்திடீரென உணவுப் பொருட்களின் விலையை அதிகரிக்க முடியாது எனவும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த முறை அரசாங்கம் சமர்ப்பித்துள்ள பாதீட்டில் உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளுக்கு நிவாரணம் வழங்கப்படாமையினால் தேநீர், பால் தேநீர் உள்ளிட்டவற்றின் விலையை அதிகரிப்பதாக அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் குறித்த உணவு வகைகளின் விலையை அதிகரிப்பதாக அந்த சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார்.

உப்பு, தேங்காய், முட்டை, கோழி இறைச்சி உள்ளிட்டவற்றின் விலை தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் தங்களது தொழிற்துறை வெகுவாக பாதிப்படைவதாகவும் அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார். (ஐ)

# குடிநீரைச் சிக்கனமான பயன்படுத்துங்கள்



கொழும்பு , பெப். 19

நாட்டில் தற்போது நிலவும் வறண்ட காலநிலை காரணமாக, குடிநீரைச் சிக்கனமான பயன்படுத்துமாறு நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது, வறண்ட காலநிலையினால் நீர் மூலங்களில் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வரும் அதேவேளை, அதிக வெப்பம் காரணமாக நுகர் வோரிடையே நீரின் பாவனையும் அதிகரித்துள்ளது.

இதனால், நீர் விநியோகத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, வாகனங்களைக் கழுவுதல் மற்றும் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை என்பவற்றுக்கு நீரைப் பயன்படுத்துவதைக் குறைத்து, அத்தியாவசிய அன்றாட தேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்துமாறு நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை கோரியுள்ளது (ஐ)

# அறுவை சிகிச்சைகளுக்காக காத்திருப்போருக்கு அறிவிப்பு



கொழும்பு , பெப். 19

அரச வைத்தியசாலைகளில் அறுவை சிகிச்சைகளுக்காக நீண்ட காலமாகக் காத்திருக்கும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் எடுக்கக்கூடிய சாத்தியமான நடவடிக்கைகளை ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட உள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் டாக்டர் நந்திக சனத் குமநாயக்க மற்றும் சுகாதாரத் துறைத் தலைவர்களுக்கிடையே இன்று (18) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சிறப்பு கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு ஒரு மாதத்திற்குள் குறித்த விவகாரம் குறித்து அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதயம், கண் மற்றும் குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சை தேவைப்படுபவர்கள் உட்பட, அரசாங்க வைத்தியசாலைகளில் நீண்ட காலமாகக் காத்திருக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை குறித்து இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த நோயாளிகள் எதிர்கொள்ளும் சவால்களை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி நிதியம் மற்றும் பிற தொடர்புடைய துறைகளால் வழங்கக்கூடிய ஆதரவு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், அரச வைத்தியசாலைகளில் வழக்கமான வேலை நேரத்திற்குப் பிறகு அறுவை சிகிச்சைகளை நடத்துவதற் கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் கூட்டத்தில் முழுமையாக விவாதிக்கப்பட்டது (ஐ)



# மிதி வெடி

படிச்சவையும், பதவியில உள்ளவையும் படுகிறபாடு பெரும்பாடு பாருங்கோ....

முந்தியொரு காலத்தில, உந்த முகப்புத்தகம் வந்த நேரத்தில இருந்து அரசியல்வாதியள் தான் ஆளுக்கு ஆயிரம் “பேக் ஐடி” வச்சு பிராண்டுப் படுறவை. அதிலும் “எலக்சன்” எண்டு வந்துட்டா, ஆக மலிவான “போஃன்” என்னவோ அதில கொஞ்சத்தை வாங்கி நிண்டவன், போனவன் - வந்தவனுக்கெல்லாம் குடுத்து, தங்களுக்கு வேண்டாதவையெல்லாருக்கும் சேறு பூசுற வேலையைப் பாத்தவை.

கூலிக்கு மாரடிக்கிறவனுக்கு, அவரெண்டால் என்ன, இவரெண்டால் என்ன? எங்க காசு வருகுதோ அங்க நல்லா வக்காலத்து வாங்கி எழுதித் தள்ளுவாங்கள். இதுக்குள்ள “அவருக்கும்”, “இவருக்கு”மா “டபிள் ஏஜெண்ட்” வேலை பாக்கிற ஆக்களும் இருக்கினம்....

அவரிட்டை வங்கின சுக்கு அவருக்கு ஆயிரம் “நோட்டீஸ்”, இவர் தந்த காசுக்குக் கணக்கா இவற்றேல கொஞ்சமா “நோட்டீஸ்” ஒட்டுற ஆக்களும் இருக்கினம்.

அரசியல்வாதிகளிண்ட கதைய விடுங்கோ... அவையளுக்கிருக்கிற “அல்லக்கை”யள் போல இப்ப அதிகாரிகளும் ஆளுக்கொரு “அல்லக்கை” வைச்சு அடிபடுகினம் தெரியுமோ....?

மாவட்டதத்தை ஆளுற அதிகாரப் பதவியில இப்ப ஆரும் இல்லைத் தானே? கடந்த ஆட்சி வரை அவரை, இவரப் பிடிச்சு அதிகாரத்தைத் தக்க வைச்சுக் கொண்டவை தானே அனேகமான இடங்களில “பதில்” கடமை செய்யினம்...

பதிலோ... என்னவோ... பதவிக்குரிய வரப்பிரசாதங்களை அனுபவிச்சவைக்கு அதை விட்டுட்டுப போறதெணடா கஷ்டமாத் தானே இருக்கும்?. அதால தான் இவ்வளவும் எண்டு கதைக்கினம் பாருங்கோ....

இப்பக் கொஞ்ச நாளா, வடக்கில இருக்கிற ஒரு அமைச்சுச் செயலாளருக்குப் போதாத காலம் போல.... முகப்புத்தகத்தில கழுவு, கழுவெண்டு கழுவி ஊத்தினமாம்...

அது கூட அதிகாரப் பதவிக்கு அவர் வந்துடுவாரோ எண்ட பயத்தில தானாம் எண்டு கதைக்கினம்...

அவர் முந்திப் பயிர் செய்யுற அமைச்சுக பொறுப்பா இருக்கேக்க அமைச்சர் சொல்லுறதைச் செய்யுறதா, ஆளுநர் சொல்லுறதைச் செய்யுறதா எண்டு தெரியாமல் “மீனுக்குத் தலையையும், பாம்புக்கு வாலையும்” காட்டித் தான் வேலை செய்தவராம்...

அதுக்குள்ள மத்திய அமைச்சர் எண்டு ஒருத்தரும், மாகாண அமைச்சர் எண்டு இன்னொருத்தரும் குடுத்த குடைச்சலுகளுக்குள்ள நிர்வாகம் நடத்துறதெண்டது லேசுப்பட்ட காரியமே?.... மனுசன் கொஞ்சம் மண்டேக்குள்ள மட்பாண்டம் இல்லாத ஆளா இருந்ததால... ஒரு மாதிரிச் சீவிச்சுப் போட்டார்.

அந்த இழுபறியில மனுசன் பட்ட பாட்டையெல்லாம் இப்ப “பதில்” கடமை செய்யுறவர் மெள்ளமாக் கசியவிட்டு, தான் “வைச்சிருக்கிற” ஆளைக் கொண்டு முகப்புத்தகத்தில வாட்டி எடுக்கிறாராம்.....

அதிகாரப் பதவிக்கு வரப்போற ஆக்கள் எண்டு கொஞ்சப் பேரின்ர பேர் அரசல், புரசலா அடிபடத் தொடங்கேக்க தான் “ஐயா” இங்கால முகப்புத்தக வசை பாடலைத் தொடங்கச் சொன்னவராம்... அதுவும் கொஞ்சம் மெதுவா... மென்மையாத் தான் போய்க் கொண்டிருந்ததாம்..

போன சனிக்கிழமை யாழ்ப்பாணத்துப் பள்ளிக் கூடம் ஒண்டுக்குப் பிரதம மந்திரி போன நேரத்தில, இந்த அமைச்சுச் செயலாளர் கொஞ்சம் “பேர்சனாலிற்றி”யா இருக்கிறார்... ஆர்? எவர்? எண்டு விசாரிச்சதுக்குப் பிறகு தான், ஐயான்ற ஆக்கள் - அது தானுங்கோ ஊழல் எதிர்ப்பு அணி எண்டு சொல்லிக் கொண்டு, ஊழலுக்குள்ளேயே ஊறிப் போயிருக்கிறவையால இயக்கப்படுறவை குத்தி முறியத் தொடங்கியிருக்கினமாம்.....

உவைக்கு ஒண்டு மட்டும் விளங்கேல்லப் பாருங்கோ... இப்ப ஆட்சிக்கு வந்திருக்கிறவை, நீங்கள் இண்டைக்குச் சொல்லுற “உருட்டுப் பிரட்டுகளை” வைச்சு இண்டைய முடிவை எடுக்கிற ஆக்களில்லைப் பாருங்கோ....

நீங்கள் மட்டுமில்ல... உங்கட முப்பாட்டன் பரம்பரை வரை என்ன செய்தவை.... எங்க எங்க நிண்டவை....ஆரோட கூட்டுச் சேர்ந்தவை எண்டதெல்லாம் விலாவாரியா அறிஞ்சு வச்சிருக்கினம்.... பதவிக்கு வர முன்னமே ஒவ்வொருத்தரின்ர “பைல்”ம் அங்க போயிற்றுதாம்.....

போன ஆட்சியள் மாதிரி வால் பிடிக்கிறவைக்குப் பதவி குடுக்கிறதெண்டா... பிறகேன் இந்த மாற்றமும்? மண்ணாங்கட்டியும்?

“பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூமி இருண்டுவிடாது!”

–நரமுனி–

# இலங்கை கடற்படையினரைக் கண்டித்து காரைக்காலில் மீனவர்கள் போராட்டம்!

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து புதுச்சேரி, காரைக்கால் பகுதியில் மீனவர்களினால் நேற்று முன்தினம் போராட்டமொன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தப் போராட்டத திற்கு ஆதரவு தெரிவித்து அப்பகுதியில் கடையடைப்புப் போராட்டமொன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையிர் கடந்த சில நாட்களுக்கு முன்னர், இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



காரைக்கால், கிளிஞ்சல் மேடு பகுதியில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காரைக்கால் மீனவர்கள் பாரிய போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர். இலங்கை கடற்படையினரின் செயற்பாடுகள், மற்றும் தமிழ்நாட்டு மீனவர்களை காக்க தவறிய இந்திய மத்திய அரசாங்கமான பா.ஜ.க. அரசாங்கத்தை கண்டித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. காரைக்கால் மாவட்ட 11 மீனவ கிராமத்தை சேர்ந்த மீனவர்களினால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கு ஆதரவினை வழங்கும்பொறுட்டு, அப்பகுதியில் கடையடைப்புப் போராட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களும் அவர்களது குடும்பத்தினரும், காரைக்கால் ரயில் நிலையத்தில் வேளாங்கண்ணிக்கு செல்லும் ரயில் முன்பு தண்டவாளத்தில் படுத்து போராட்டம் நடத்தியதால் பெரும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.



## தலைமை தேர்தல் ஆணையராக பதவியேற்றார் ஞானேஷ் குமார்

இந்திய தலைமை தேர்தல் ஆணையராக இருந்த ராஜீவ் குமார் நேற்றோடு (பெப்ரவரி 18ஆம் திகதி) ஒய்வு பெற்றார். இதையடத்து, புதிய தலைமை தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமார் நியமனம் செய்யப்பட்டார்.

தேர்தல் ஆணையத்தின் உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான புதிய சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட முதல் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் ஆவார். இந்நிலையில், நாட்டின் 26ஆவது தலைமை தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமார் இன்று காலை (பெப்ரவரி 19) பதவியேற்று கொண்டார்.

இந்தியாவின் 26ஆவது தலைமை தேர்தல் ஆணையராக பதவியேற்றுள்ள ஞானேஷ் குமார் ஜனவரி 26, 2029 வரை பதவியில் இருப்பார். இவரது பதவிக்காலத்தில், இந்த ஆண்டு இறுதியில் பீகார் சட்டசபை தேர்தல் நடக்கிறது. அடுத்த ஆண்டு, தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் சட்டசபை தேர்தல் நடக்கிறது.

மேலும், 2027ஆம் ஆண்டு குடியரசு தலைவர் மற்றும் துணை குடியரசு தலைவர் தேர்தல்களையும் நடத்துவார். 2029 பாராளுமன்ற தேர்தல் அறி விப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு ஞானேஷ் குமார் ஒய்வு பெறுவார்.

### நிபா வைரஸ் பாதிப்பு எச்சரிக்கை

## தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்டங்களுக்கு சுகாதாரத்துறை உத்தரவு



கேரள மாநிலத்தில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஏதாவது ஒரு தொற்று நோய் பரவியபடி இருக கிறது. பருவமழை காலத்தில் டெங்கு உள்ளிட்ட பல்வேறு காய்ச்சல்களால் ஏராளமானோர் பாதிக்கப்படுகின்றனர்.

இந்தநிலையில் தற்போது அங்கு நிபா வைரஸ் பரவுவதற்கு சாதகமான பருவம் தொடங்கியிருப்பதாவும், ஆகவே தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்டங்களுக்கும் மாநில சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது. மேலும் பொதுமக்கள் விழிப் புடனும், எச்சரிக்கையுடனும் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநில சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள விழிப்புணர்வு அறிவிப்பில் கூறியிருப்பதாவது:-

1. பறவைகள், விலங்குகளால் பகுதியளவு உண்ணப்பட்ட அல்லது தரையில் விழுந்த பழங்களை சாப்பிடுவதை தவிர்க்கவும்.

2. பயன்படுத்துவதற்கு முன்பு பழங்களை நன்கு கழுவவும்.

3. திறந்த கொள்கலன்களில் சேமித்து வைக்கப்பட்டகள் அல்லது அது போன்ற பானங்களை உட்கொள்ள வேண்டாம்.

4. கீழே விழுந்த பழங்கள், பாக்கு அல்லது அதுபோன்ற பொருட்களை கையாளும் போது எப்போதும் கையுறைகளை அணியுங்கள்.

5. வௌவால்களால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய பழங்கள் அல்லது பழங்களின் மேற்பரப்புகளை தொடும்போது கையுறைகளை பயன்படுத்தவும். நேரடியாக தொடும் நிலை ஏற்பட்டால் உடன டியாக சோப்பு மற்றும் தண்ணீரில் கைகளை கழுவவும்.

6. வௌவால்களின் வாழ்விடங்களை தொந்தரவு செய்யவோ அல்லது அழிக்கவோ வேண்டாம், ஏனென்றால் இது அவற்றை கிளர்ச்சியடைய செய்து உடல் திரவங்களின் சுரப்பை அதிகரிக்க வழிவகுக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கால்பந்து போட்டியில் பட்டாசு வெடித்து விபத்து

### 30 பேர் காயம்



கேரள மாநிலம் மலப்புரத்தில் உள்ள கால்பந்து மைதானத்தில் நேற்று முன்தினம் பட்டாசுகள் வெடித்ததில் 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மலப்புரத்தில் உள்ள அரிக்கோடு அருகே உள்ள கால்பந்து மைதானத்தில் யுனைடெட் எப்சி நெல்லிக்குத் மற்றும் கேஎம்ஜி மாவூர் அணிகளுக்கு இடையிலான இறுதிப்போட்டி நடந்துள்ளது.

கால்பந்து போட்டி தொடங்குவதற்கு முன்பு மைதானத்தில் பட்டாசுகள் வெடித்துள்ளனர். பட்டாசுகள் வெடித்து பார்வையாளர்கள் இருந்த பகுதியில் சிதறின. இந்த விபத்தில் 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதுதொடர்பாக பொலிஸார் கூறுகையில், கால்பந்து போட்டி தொடங்குவதற்கு முன்பு பட்டாசுகள் வெடித்ததால் இந்த சம்பவம் நடந்தது.

பட்டாசுகள் வெடித்து, மைதானத்திற்குள் போட்டியைப் பார்க்க மக்கள் அமர்ந்திருந்த பகுதியில் சிதறி வெடித்தது. இதில் காயமடைந்தவர்கள் அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். யாருக்கும் பெரிய காயங்கள் ஏற்படவில்லை. இந்த சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

# சிறகுகளை விரிப்போம்!



எத்தனை வயதானாலும் பயணங்கள் என்பவை எப்போதுமே குதூகலம் கொடுப்பவை தான். ஒரே இடத்தில் ,ருந்து சலித்த மனதுக்கு புதிய ,டங்கள், புது மனிதர்கள், புதுப் புது உணவுவகைகள் என்று ஒரு புதிய அனுபவத்தைப் பயணங்கள் தான் ஏற்படுத்திக் கொடுக்கும்.

ஆனால் பயணங்கள் அதுவும் சாகசப் பயணங்கள் என்பவை எல்லாம் நம் ,ந்தியச் சூழலில் ஆண்களுக்கு மட்டுமே எப்போதும் வாய்க்கிறது. பெண்கள் பயணம் போவதென்பது குடும்பச் சுற்றுலாவாகவே பெரும்பாலும் வாய்க்கிறது. அல்லது ஆன்மீகச் சுற்றுலாக அவை அவதாரம் எடுக்கும். அவ்வளவே. இப்போது அந்த நிலை கொஞ்சம் மாற்றம் கண்டிருக்கிறது. நல்ல மாற்றம்தான்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் கண்ணுக்கு எட்டிய அளவு வானத்தோடு, கடலோடு உலகம் முடிவதாக மனித சமுதாயம் நம்பிக் கொண்டிருந்தது. அதன்பின் துணிச்சல் மிகுந்த சிலரால் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு உலகத்தின் வரைபடமும் தயாரிக்கப்பட்டது. ஆனால் ஆரம்பகாலப் பயணிகள் ஆண்களாகவே ,ருந்தனர் என்றுதான் சரித்திரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. யுவான் சுவாங், வாஸ்கொடகாமா, மார்க்கோ போலோ, ,பன் பதுதா கேப்டன் குக் என்று ஆண்கள்தான் உலகம் சுற்றும் நாடோடிகளாக ,ருந்தனர்.

பெண்களுக்கு ,வை எல்லாம் எட்டாக்கனியாகவே இருந்தன. ,ன்றும் அந்த நிலையே தொடர்வதுதான் மிகப்பெரிய சோகம். பயணக் கட்டுரைகளும் ,துநாள் வரை ஆண்களின் கண்ணோட்டத்திலேயே எழுதப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் ,ப்போது மெல்ல மெல்லப் பெண்களும் பயணம் செய்து, கட்டுரைகள் எழுதும் அளவுக்கு மாறி ,ருக்கிறார்கள் என்பது ஒரு சிறிய ஆறுதல்.

வரைபடங்கள் இல்லாத அன்றைய காலகட்டத்தில் புதிய பாதைகளைக் கண்டறிந்து, மற்றவர்களும் அதன் வழியே பயணம் செய்ய ஏதுவாக பயண இலக்கியங்கள் தோன்றின. தாங்கள் கண்டதை, கேட்டதை, அறிந்ததை, உணர்ந்ததை மற்றவர்களும் தெரிந்து கொள்ள பாடலாக, ஓவியங்களாக, கட்டுரைகளாக, பயண நூல்கள் படைக்கப்பட்டன. ,த்தகைய பயண நூல்கள் மூலம் அந்த ,டங்களுக்குச் செல்பவர், முன்பே சென்றவரின் அனுபவங்களைக் கொண்டு அந்தச் சூழ்நிலையை புரிந்து கொள்ளவும், கையாளவும் ஏதுவாக அமைகிறது.

தமிழில் பயண ,லக்கியம் என்பது புதிதான ஒன்றல்ல. சங்க காலத்தில் ,ருந்தே பயணம் பற்றிய செய்திகளும் குறிப்புகளும் சங்க ,லக்கியங்களில் இடம்பெற்று இருக்கின்றன. சங்கத் தமிழர்கள் கிரேக்கர்களுடன், ரோமானியர்களுடன் பயணங்கள் மூலமாக வியாபாரத் தொடர்பு வைத்திருந்தார்கள். அவர்களை 'யவனர்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். தொல்காப்பிய காலத்தில் பயணம் என்ற சொல் இடம்பெறவில்லை. 'செலவு' என்ற சொல்லே பயணத்தைக் குறிப்பதாக அமைந்திருந்தது.

பெண்கள் மட்டும் ,ணைந்து பயணம் போவதென்பது ,யலாது என்று நிறையப் பெண்களே நினைக்கிறார்கள். தங்குமிடம், பாதுகாப்பு என்றெல்லாம் காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் சரியான திட்டமிடல் ,ருந்தால், பெண்கள் எங்கு வேண்டுமானாலும் பயணிக்கலாம். பெண்கள் மட்டும் பயணிக்க ,யலாதென்று ஆண்கள் நினைக்கிறார்கள் என்றால், அதற்கு ஒரே காரணம் நான்கு பெண்களால் ஒற்றுமையாக ,ருக்க முடியாது என்ற பொதுப்புத்தி.

மற்றொன்று பெண்கள் பயணம் செய்ய வீட்டாரின் 'அனுமதி' அவ்வளவு எளிதில் கிடைக்காது என்பதும்தான். 'ஸ்வீட், காரம், காபி' என்ற வெப் தொடரில் பாட்டி, அம்மா, மகள் என்ற மூன்று தலைமுறைப் பெண்கள் மூச்சு முட்டும் வீட்டுச் சூழலில் ,ருந்து கொஞ்சம் வெளிக்காற்றைச் சுவாசிக்க வீட்டாரிடம் சொல்லாமல் பயணம் செல்வார்கள். வீட்டினர் அதிர்ந்தாலும் அவர்களைத் திரும்ப வரவைக்க ஏதேதோ நாடகமாடுவார்கள். ஆனாலும் அவர்கள் சில நாள்கள் வெளியில் கழித்து விட்டுத்தான் வருவார்கள்.

அதேபோல் ஜோதிகா நடித்த 'மகளிர் மட்டும்' திரைப்படத்தில் மூன்று நாள்கள் தோழிகள் ஒன்றாகச் சேர்ந்து வெளியே செல்வார்கள். நிஜத்தில் ,து எந்த அளவு சாத்தியம் என்பது ,ப்போதும் கேள்விக் குறியாகவே ,ருக்கிறது.

கற்பனையில் ,ரண்டு, மூன்று பெண்கள் தனியாக வெளியில் செல்வதைக்கூட ஏற்றுக் கொள்ள முடியாமல் ஆண்மனம் கடுப்பாகிறது என்பதுதான் ,ங்கு உண்மை.

அப்படியே வெளியில் சென்றாலும் அந்த சில நாள்களுக்கு முன்னரே நிறைய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். (ஒருவேளை) சென்று வந்த பிறகும், வீட்டின் நிலைமையைச் சரிசெய்யப் பெண்கள்தான் அல்லாடுவார்கள். ,துதான் உண்மை.

நிறைய பெண்கள் குடும்பத்தினருக்காகத் தான் கவலைப்படுகிறார்கள். தாங்கள் இல்லாமல் போனால் அவர்கள் சிரமப்படுவார்கள் என்று கவலைப்படுவதைவிட தனது தேவை, முக்கியத்துவம், இருப்பு போன்றவை அலட்சியப்படுத்தப் படுமோ என்ற உளவியல் காரணம் தான் ,தற்குக் காரணம்.

ஏனெனில் நம் சமூகத்தில் ஓர் ஆணைத் தன் கைப்பிடியில் வைத்துக் கொள்ள அலங்காரமும், சமையலும்தான் ஒரே வழி என்று பெண் பிறந்ததில் இருந்தே புகட்டப்படுகிறது. அதற்கு ஏதேனும் ஆபத்து வந்து விடுமோ என்ற அச்சம் பெண்களுக்குள் நீறு பூத்த நெருப்பாகவே ,ருக்கிறது. வெளிநாட்டுப் பெண்கள் தனக்கென்று நேரம் ஒதுக்கிப் பயணிக்கும்போது, நம் நாட்டுப் பெண்கள் கண்ணுக்குத் தெரியாத மாயத் தளைகளைக் காலில் பூட்டிக் கொண்டு செக்குமாடாக ஒரே ,டத்தில் உழன்று கொண்டிருக்கின்றனர். அந்தத் தளைகளிலிருந்து விடுபடவும் விரும்பாமல், சிலர் வாழ்நாளெல்லாம் ஒரே ,டத்தில் ,ருந்து மடிந்தும் விடுகின்றனர்.



பயணம் செய்வதற்கு ஏதாவது ஒரு தேடல் வேண்டும். நிறையப் பெண்களுக்குத் தேடல் ,ருந்தாலும் அதைச் செயற்படுத்த குடும்பச் சூழல் விடுவதில்லை என்பதே உண்மை. அப்படியே பயணங்கள் கைகூடி வந்தாலும் மனதுக்குள் நத்தையைப் போல வீட்டைச் சுமந்து கொண்டேதான் அலைகிறார்கள். ,ந்த மனப் போக்கைப் பெண்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். கூடுமானவரை வீட்டுப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வதாலும், சிறு வயதில் ,ருந்தே தனது வேலைகளைச் செய்து கொள்ளக் குழந்தைகளைப் பழக்குவதாலும், ஒருவரைச்சார்ந்தே அதுவும் குறிப்பாக பெண்களைச் சார்ந்தே வீட்டினர் இருப்பது மாறும். ஆனால் அதற்கான மனப்போக்கை முதலில் பெண்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

(7ஆம் பக்கம் பார்க்க...)

**வரைபடங்கள் இல்லாத அன்றைய காலகட்டத்தில் புதிய பாதைகளைக் கண்டறிந்து, மற்றவர்களும் அதன் வழியே பயணம் செய்ய ஏதுவாக பயண இலக்கியங்கள் தோன்றின. தாங்கள் கண்டதை, கேட்டதை, அறிந்ததை, உணர்ந்ததை மற்றவர்களும் தெரிந்து கொள்ள பாடலாக, ஓவியங்களாக, கட்டுரைகளாக, பயண நூல்கள் படைக்கப்பட்டன.இத்தகைய பயண நூல்கள் மூலம் அந்த இடங்களுக்குச் செல்பவர், முன்பே சென்றவரின் அனுபவங்களைக் கொண்டு அந்தச் சூழ்நிலையை புரிந்து கொள்ளவும், கையாளவும் ஏதுவாக அமைகிறது.**



# பொலிவியா பஸ் விபத்தில் 30க்கும் மேற்பட்டோர் பலி!

பொலிவியாவின் மலைப்பாதையில் பஸ் விபத்துக்குள்ளானதில் 30 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என அந் நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனம் தென்மேற்கு மாவட்டமான யோகல்லாவில் சுமார் 800 மீற்றர் (2625 அடி) பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் நான்கு குழந்தைகள் உட்பட 14 பேர் காயமடைந்துள்ளனர் என்று உள்ளூர் மருத்துவமனை அதிகாரி ஒருவர் சர்வதேச ஊடகங்களிடம் உறுதிபடுத்தியுள்ளார்.

பொலிவியாவின் மலைப்பகுதிகளில் ஆபத்தான சாலைகள் உள்ளன.

இந்த விபத்து Potosí மற்றும் Oruro நகரங்களுக்கு இடையே நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிவேகமாக பயணித்ததால், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பஸ், பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என ஆரம்ப கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டில் இதுவரை தென் அமெரிக்க நாட்டில் பதிவான மிக மோசமான சாலை விபத்து இதுவாகும்.

## துணை ராணுவ தாக்குதல் சூடானில் 200 பேர் பலி

வட கிழக்கு ஆப்ரிக்க நாடான சூடானில், பயந்து ஓடிய அப்பாவி மக்கள் மீது, துணை ராணுவப்படையினர், கடந்த மூன்று நாட்களாக நடத்திய தாக்குதலில், 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

சூடானில் 2023 முதல், ராணுவ தளபதி அப்துல் பட்டா அல் - பர்ஹான் மற்றும் அவரது முன்னாள் உதவி தளபதி முகமது ஹம்தான் டாக்லோ தலைமையிலான, ஆர்.எஸ்.எப்., எனும் துணை ராணுவ படையினருக்கும் இடையே நடந்து வரும் சண்டையில், பல ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இரு தரப்பு மோதலுக்கு அஞ்சி, நைல் நதியோரம் உள்ள கிராமங்களில் இருந்து, தப்பி ஓடிய அப்பாவி பொதுமக்கள் மீது, ஆர்.எஸ்.எப்., துணை ராணுவப்படையினர் துப்பாக்கியால் சுட்டனர். கடந்த மூன்று நாட்களாக நடத்தப்பட்ட தாக்குதலில், 200க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாக, எமர்ஜென்சி லாயர்ஸ் என்ற அமைப்பு குற்றஞ்சாட்டிஉள்ளது. கொல்லப்பட்டவர்களில் பலர், நைல் நதி நீரில் மூழ்கி இறந்தவர்கள் என கூறப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை துவங்கிய தாக்குதலில், அப்பாவி மக்கள் பலர் கடத்தப்பட்டனர் பலர் மாயமாகினர் பொதுச்சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன. தாக்குதலுக்கு பயந்து தப்பியோடியோர் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதில், 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் பல நுாறு பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என, அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர்களில் பலர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என தெரிவித்துள்ள எமர்ஜென்சி லாயர்ஸ் அமைப்பு, தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் ராணுவம் இல்லை. எனினும், அங்கு தாக்குதல் எதற்காக நடத்தப்பட்டது என்பது தெரியவில்லை என கூறியுள்ளது.

## இந்தியப் பிரதமர் மீது மிகுந்த மரியாதை

### ட்ரம்ப் தெரிவிப்பு



'இந்தியாவின் மீதும் இந்தியப் பிரதமர் மோடி மீதும் தனக்கு மிகுந்த மரியாதை இருப்பதாக' அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவி நிறுத்தப்பட்டுள்ளமை குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போதே இதனைத் தெரிவித்த அவர், இந்தியர்களிடம் அதிக பணம் இருப்பதாகவும், வளர்ந்து வரும் பொருளாதாரம் மற்றும் அதிக வரி விகிதங்களைக் கொண்ட இந்தியாவிற்கு அத்தகைய நிதி உதவி தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்காவைப் பொறுத்தவரை இந்தியா உலகில் அதிக வரி விதிக்கும் நாடுகளில் ஒன்றாகும் எனவும், அவர்கள் அதிகமாக வரி விதிப்பதால் தாம் அங்கு செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும், எனினும் இந்தியா மற்றும் பிரதமர் மீது தனக்கு மிகுந்த மரியாதை உள்ளது எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவில் வாக்கு சதவீதத்தை அதிகரிப்பதற்காக வழங்கப்பட்டு வந்த 21 மில்லியன் டொலர் (இந்திய மதிப்பில் 182 கோடி ரூபாய்) நிதியை நிறுத்தி வைக்க எலோன் மஸ்க் தலைமையிலான னுழபுநு குழு உத்தர விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலிய கடற்கரையில் கரையொதுங்கிய திமிங்கலங்கள்



அவுஸ்திரேலிய மாநிலமான டாஸ்மேனியாவில் உள்ள ஒரு கடற்கரை பகுதியில் 150 க்கும் மேற்பட்ட திமிங்கலங்கள் கரையொதுங்கிய நிலையில் சிக்கித் தவிக்கின்றன.

கடந்த 48 மணி நேரத்தில் நடந்த இந்த சம்பவத்தில் டஜன் கணக்கான டொல்பின்கள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரம், இன்று காலை நிலவரப்படி சுமார் 90 டொல்பின்கள் மாத்திரமே தற்சமயம் உயிருடன் உள்ள நிலையில், அவற்றை காப்பாற்றும் பணிகளில் சுற்றுச்சூழல் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

சிக்கித் தவிக்கும் டொல்பின்கள் பொய் கொலைத் திமிங்கலம் (false killer whales) என்று நம்பப்படுகிறது,

டாஸ்மேனியாவின் இந்தப் பகுதியில் 50 ஆண்டுகளில் இது போன்ற திமிங்கலங்கள் கரை ஒதுங்குவது இதுவே முதல் முறையாகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொய் கொலைத் தொழில்நுட்ப ரீதியாக மிகப்பெரிய டொல்பின் இனங்களில் ஒன்றாகும்.

மேலும் அவை 6 மீற்றர் மற்றும் 1.5 அடி வரை வளரக்கூடியவை.

## 22 வயது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது மனைவியுடன் புளூமெண்டல் ரயில் மார்க்கத்துக்கு அருகில் வந்தபோது, சம்பவ இடத்தில் இருந்த மற்றொரு நபர் அவரை வேறொரு இடத்துக்கு அழைத்துள்ளார்.

இதன்போது, மோட்டார் சைக்கிள்களில் வந்த குழுவினர் கூரிய ஆயுதங்களால் மேற்படி நபரை வெட்டிப் படுகொலை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்என்று பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்துக்கான காரணம் மற்றும் கொலையாளிகள் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கப் பெறாத நிலையில், கொட்டாஞ்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## ஓடும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள அமுனுவெல்பிட்டிய பகுதியில் உள்ள சுரங்கப் பாதையைக் கடந்து ஓடும் ரயிலில் செல்பி எடுத்துக்கொண்டிருந்த மேற்படி பெண் தவறி கீழே வீழ்ந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் அதே ரயிலில் ஹாலிஎல ரயில் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பதுளை போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பதுளை போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹலிஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நிதிமன்றத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஞ்சீவ' என்று அழைக்கப் படும் சஞ்சீவ குமார சமர ரத்ன

உயிரிழந்துள்ளார். புதுக்கடை நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் இலக்கம் 5 நீதிவான் நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் அவர் சாட்சியமளிக்க நிறுத்தப்பட்டிருந்தபோதே இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச்சூட்டுக்காகப் பயன்படுத்தப்பட்ட ரிவோல்வர் ரகத் துப்பாக்கி நீதிமன்ற வளாகத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த 'கனேமுல்ல சஞ்சீவ', கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி நேபாளத்தின் காத்மாண்டுவில் இருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தடைந்தபோது, 2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி 'கனேமுல்ல சஞ்சீவ' குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

காலி பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர், வழக்கு ஒன்றில் ஆஜராவதற்காக இன்று காலை புதுக்கடை நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். அதன்போது சாட்சியமளிப்பதற்காக அவர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்தபோதே இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தையடுத்து புதுக்கடை நீதிமன்றக் கட்டடத் தொகுதி வளாகம் பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் கடும் சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## சட்டத்தரணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்துக்குள் நுழைந்த ஆண் ஒருவரினால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சட்டத்தரணி வேடத்தில் பெண் ஒருவரும் நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளார் என்றும் பொலிஸாரின் மேலதிக விசாரணைகளில் தெரிவந்துள்ளன.

அதன்படி, துப்பாக்கிதாரி சட்டத்தரணி வேடத்தில் வெறும் கையில் நீதிமன்றத்துக்குள் முதலில் சென்றுள்ளார் என்றும், பின்னர் மேற்படி பெண் புத்தகத்தில் துப்பாக்கியை மறைத்து வைத்து சட்டத்தரணி வேடத்தில் நீதிமன்றத்துக்குச் சென்று துப்பாக்கிதாரியிடம் துப்பாக்கியைக் கொடுத்துள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களை கைது செய்யப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நிதிமன்றங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் குறிப்பிட்டார்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கனேமுல்ல சஞ்சீவ கொலையின் முக்கிய சந்தேக நபர் கைது

கொழும்பு , பெப். 19

போதைப்பொருள் கடத்தல்காரரும் குற்றவியல் கும்பல் தலைவருமான சஞ்சீவ குமார சமரரத்னவை சுட்டுக் கொன்ற வழக்கில் முக்கிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பாலவியா பகுதியில் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை (ளுவுகு) அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 34 வயதான முகமது அஸ்மான் ஷெரிப்தீன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குற்றவியல் கும்பல் தலைவரான கனேமுல்ல சஞ்சீவ எனப்படும் சஞ்சீவ குமார சமரரத்ன, இன்று (19) காலை 10.00 மணியளவில் புதுக்கடை நீதிமன்ற வளாகத்தின் 05 ஆம் இலக்க நீதிமன்றத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

நீதிமன்ற வளாகத்தில், குற்றம் சாட்டப்பட்டவர் கூண்டில் இருந்து சஞ்சீவ இறங்கவிருந்தபோது அந்த இடத்திற்கு வருகைத்தந்த சந்தேகநபரால் துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேகநபர் பல முறை துப்பாக்கிச் சூடு நடத்திய பிறகு, துப்பாக்கியை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு கூண்டில் உள்ள ஒரு கதவு வழியாக தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சட்டத்தரணிகள் நீதித்துறை கடமைகளுக்குப் பயன்படுத்தும் குற்றவியல் நடைமுறைச் சட்ட புத்தகத்தில் பக்கங்களை வெட்டி துப்பாக்கியை மறைத்து வைத்திருந்ததாகவும், நீதிமன்ற வளாகத்தில் அவருக்கு ஆதரவளித்த பெண் ஒருவரால் புத்தகம் அவருக்கு வழங்கப்பட்டதாகவும், அந்தப் கண்டுபிடிக்க விசாரணை நடந்து வருவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (ஐ)

# முல்லைத்தீவில் உள்ளூர் உற்பத்தியாளர் ஊக்குவிப்பு நிலையம் திங்களன்று திறப்பு

முல்லைத்தீவில் உள்ளூர் உற்பத்தியாளர் ஊக்குவிப்பு நிலை யம் எதிர்வரும் 24ஆம் திகதி, திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் வடக்கு - கிழக்கு பொருளாதார அபிவிருத்தி மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

"இலங்கையில் இடம்பெற்ற போரினால் அதிகமாக பாதிக்கப்பட்டதோடு இன்றுவரை மிக அதிகமான வறுமை நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது. இப் பிரதேசத்தில் சிறு தொழில் செய்யும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் அதிகமாக வாழ்ந்து வருவதோடு பன்முகத்தன்மை வாய்ந்த பல உற்பத்திப்பொருட்களையும் தயாரித்து வருகின்றனர்.

ஆனாலும் சந்தைப்படுத்தல் வசதிகள் இல்லாததால் அவர்களின் உழைப்பிற்கும் உற்பத்திப் பொருட்களுக்குமான சரியான இலாபத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கவும், அவர்களுக்கான திறந்த சந்தை வாய்ப்புக்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் வடக்கு கிழக்கு பொருளாதார அபிவிருத்தி மையத்தினால் (NEED Centre), கனடிய தமிழர் பேரவையின் உதவியுடன் "Made in Mullaitivu" உள்ளூர் உற்பத்தியாளர் ஊக்குவிப்பு நிலையம் திறந்துவைக்கப்பட உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அரச அதிபரினதும், உள்ளூர் உற்பத்தியாளர்களின் வேண்டுகோளின்படியும், கனடிய தமிழர் பேரவையின் நிதியுதவியுடன் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தத் திறப்பு விழாவின் பிரதம விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் உமாமகேஸ்வரனும் , இலங்கைக்கான கனடிய உயர்ஸ்தானிக அதிகாரிகளும், கனடிய தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் மற்றும் இத்திட்ட நன்கொடையாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாள்: 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி, திங்கட்கிழமை

நேரம்: காலை 10.00 மணி

இடம்: முல்லைத்தீவு மாவட்டம், முல்லைத்தீவு புதிய பஸ் நிலையம்

மேட் இன் முல்லைதீவு செயற்திட்டம் மூலமாக உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதோடு உற்பத்தியாளர்களுக்கு ஒரு சர்வதேச சந்தை வாய்ப்பையும் பெற்றுக்கொடுக்க முடியும். இது வெற்றிபெறும் பட்சத்தில் நிலையான பொருளாதார கட்டமைப்பொன்றை வடக்கு, கிழக்கில் உருவாக்க முடியும்.

இந்த முக்கியமான நிகழ்வில் அனைத்து ஊடக நண்பர்களின் ஆதரவையும் வருகையையும் எதிர்பார்க்கின்றோம்." - என்றுள்ளது.

# சிறகுகளை விரிப்போம்!.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

விண்வெளிப் பயணங்களை, ஆழ்கடல் பயணங்களைக் கூட ,ன்றைய பெண்கள் மேற்கொள்ளத் தொடங்கி விட்டார்கள். என்றாலும், சாதாரணமான ஒரு சிறிய பயணத்திற்குக்கூட வீட்டாரின் அனுமதியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் பெண்களும் ,ங்கேதான் ,ருக்கின்றனர் என்பதை நாம் மறக்கவும், மறுக்கவும் இயலாது.

சுற்றுலா என்பது வழக்கமான சூழலில் ,ருந்து வேறொரு சூழலுக்கு ஓய்வு அல்லது அலுவல் விஷயமாகக் குறிப்பிட்ட காலத்திற்கு மேற்கொள்ளப்படும் பயணம் ஆகும். 1980ஆம் ஆண்டு முதல், உலக சுற்றுலா தினம் ஆண்டுதோறும் செப்ரெம்பர் 27 அன்று கொண்டாடப்படுகிறது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில் வளர்ச்சிக்கு சுற்றுலா உதவுகிறது. நாடுகளுக்கிடையே நல்லுறவையும், இணக்கத்தையும், புரிந்துணர்வையும் சுற்றுலாக்கள் ஏற்படுத்துகின்றன.

பயணங்கள் ஒரு தனிமனிதரை மேம் படுத்த உதவுகின்றன. தனக்குள்ளிருக்கும் திறமைகளைக் கண்டறியவும், சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொள்ளவும் உதவுகின்றன. புது சூழல் நம்மைப் புத்துணர்வாகவும், ஆரோக்கியமாகவும் வைத்துக்கொள்ளப் பெரும் பங்காற்றுகிறது. நம்முடைய படைப்பாற்றல் திறனும், ஆளுமையும் மேம்படும். நம்மைப் பற்றி நாமே அறிந்து கொள்ள, பயணங்கள் பயன்படுகின்றன. சில பயணங்கள் நம்முடைய வாழ்க்கை போக்கையே மாற்றி விடும். மகாத்மா காந்தி அவர்களின் தென்னாப்பிரிக்க பயணம் அவரது வாழ்க்கையின் போக்கையே மாற்றியதை நாம் அறிவோம்தானே. வாழ்க்கையை நாம் பார்க்கும் கண்ணோட்டம் கூட மாறிவிடும்.

தம்பதியர் தங்களுக்குள் அதிக நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், ஒருவரை ஒருவர் முழுமையாகப் புரிந்து கொள்ளவும், அவ்வப்போது சிறிய பயணங்களை ஏற்படுத்திக் கொண்டு சுற்றுலா அல்லது சிற்றுலா (பிக்னிக்) செல்வது குடும்ப வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ளதாக ,ருக்கும்.

ஒரே ,டத்தில் வசிப்பது மனதுக்கு அழுத்தத்தைக் கொடுக்கக் கூடியது. அவ்வப்போது பயணங்கள் செய்து நமக்கு நாமே சார்ஜ் போட்டுக் கொள்வது நல்லது. அவசியமும் கூட. பயணங்கள் பல மாற்றங்களை நமக்குள் ஏற்படுத்தும். புது விஷயங்களைக் கற்றுக் கொள்வதன் மூலம் நம் பார்வையும் கண்ணோட்டமும் பரந்து விரிந்ததாக மாறும். நம் முன்னோர்கள் பயணம் செய்ததால்தான் புதிய நாடுகள், மொழிகள், கலாசாரங்கள் போன்றவை நமக்கு அறிமுகம் ஆயின.

மனதை மலர்ச்சியாக வைத்துக் கொள்ளப் பயணங்கள் அவசியம். பயணங்கள் கலாசாரங்களை மறுசீரமைப்பு செய்யவும் உதவுகின்றன. புத்தகங்களில் ,ருந்து கற்றுக் கொள்வதை விட பயணங்கள் அதிகமாக நமக்கு பாடங்களை சொல்லித் தருகின்றன. நாம் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு சிறு பகுதியாவது பயணத்திற்கு ஒதுக்க வேண்டும். நேரத்தைச் செலவு செய்தேனும் ,னிய நினைவுகளைச் சேகரிக்க வேண்டும். ,னிவரும் காலங்களில் பெண்கள் கூடுதல் பயண ,லக்கியங்களைப் படைக்க வேண்டும்.

,ருப்பது ஒரு வாழ்க்கைதான். கூண்டுக்கு வெளியே ஒரு ஆகாயமும், கொஞ்சம் மேகங்களும், சிறு துண்டு நிலாவும், நட்சத்திரங்களும், பெரியதொரு சூரியனும் காத்துக் கிடக்கின்றன. சிறகுகளை விரிப்போம். வானத்தை அளப்போம்.. வாருங்கள் தோழிகளே!







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.02.2025 இல் வெளியிடப்பெற்றது.